பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

மலர் 7 திருவள்ளுவர் ஆண்டு 2023 ஆடி 31 சனிக்கிழமை (15-08-1992) UTHAYAN — A Lively National Tamil Daily இதழ் 261

# யாழ். நகர் மீது இரவு ஷெல் வீச்சு!
# இளம் பெண் பலி; 6 பேர் படுகாயம்!!

## மண்டைதீவிலிருந்து தாக்குதல்

யாழ்ப்பாணம், ஆகஸ்ட் 15

மண்டைதீவு இராணுவ முகாம் பகுதியிலிருந்து யாழ். நகரை நோக்கி நேற்றிரவு ஆட்லறி ஷெல் தாக்குதல் நடத்தப்பட்டது. நகரப் பகுதியில் விழுந்து வெடித்த ஒரு ஷெல்லினால் இளம் பெண் ஒருவர் பலியானார்; அந்தப் பெண்ணின் குடும்பத்தவர் நால்வர் உட்பட ஆறு பேர் படுகாயமடைந்தனர்.

நேற்றிரவு 8.45 மணியளவில் இந்தஷெல்தாக்குதல் சம்பவம் இடம் பெற்றது.

யாழ். நகரப் பகுதியில்— ஐந்து சந்தி, ஓட்டுமடம் சந்தி ஆகியவற்றுக்கு அப்பால் — ஒஸ்மானியாக் கல்லூரி வீதிப் பகுதியில் — விழுந்த ஷெல்லினாலேயே இளம் பெண் உயிரிழந்தார்.

வேலணை 2ஆம் வட்டாரத்திலிருந்து இடம்பெயர்ந்து வந்த இப்பெண்ணின் குடும்பத்தவர்கள் தங்கியிருந்த வீட்டின் மீது ஷெல் விழுந்தது. இதனால் வீட்டில் விறாந்தையில் படுத்திருந்தோர் ஷெல் குண்டின் தாக்குதலுக்கு இலக்கானார்கள்.

கவிதா இராசரத்தினம் [வயது 16] என்பவரே உயிர் இழந்தவராவார்.

அவரின் சகோதரங்களான

[6 ஆம் பக்கம் பார்க்க]

பல்கலைக்கழக அனுமதி

## அரசின் நடவடிக்கைகளை இடைநிறுத்தக் கோரி மனு

### யாழ். மாணவன் சார்பில் தாக்கல்

கொழும்பு, ஆக. 15

1991 - 92 ஆம் ஆண்டுக்குரிய பல்கலைக்கழக அனுமதி தொடர்பாக அரசு எடுத்து வரும் சகல நடவடிக்கைகளையும் இடைநிறுத்தும்படி கோரி, உயர் நீதிமன்றத்தில் கடந்த 7 ஆம் திகதி மனு ஒன்று தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது.

1990 ஆகஸ்டிலும் 1991 ஏப்ரலிலும் நடத்தப்பட்ட ஜி. சி. ஈ. [உயர்தரப்] பரீட்சைகளை வெவ்வேறானவையாக கருதுவது என அரசு எடுத்த முடிவை ஆட்சேபித்து தாக்கல் செய்யப்பட்டிருக்கும் அடிப்படை உரிமை மீறல் மனுவிலேயே இவ்வாறு இடைக்காலத் தடை உத்தரவு விதிக்கக் கோரப்பட்டிருக்கிறது.

அரசின் முடிவால் பல்கலைக்கழக அனுமதியில் பாதிக்கப்பட்டிருக்கும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த— இராசையா சுரேந்திரன் என்ற மாணவனின் சார்பில் இந்த மனு தாக்

[6 ஆம் பக்கம் பார்க்க]

## புளொட் இயக்கத்தினர் இருவர் வவுனியாவில் பலி

### லொறி தீக்கிரையாக்கப்பட்டது

வவுனியா தாண்டிக்குளம் பகுதியில் நேற்று முன்தினம் காலை 10 மணியளவில் விடுதலைப் புலிகள் நடத்திய திடீர் தாக்குதலில் புளொட் அமைப்பைச் சேர்ந்த இருவரும் ஸ்ரீலங்காப் படையைச்சேர்ந்த ஒருவரும் உயிரிழந்தனர்; மற்றும் ஒருவர் காயமடைந்தார்.

இதனையடுத்து வவுனியாவுக்குள் செல்லவிருந்த லொறி ஒன்று புளொட் குழுவினரால் தீக்கிரையாக்கப்பட்டது.

இதற்கிடையில்—

கொழும்பிலிருந்தும் வட பகுதியிலிருந்தும் வவுனியாவுக்குள் வரும் வாகனங்கள் யாவும் படையினரால் கடுமையாகச் சோதிக்கப்படுவதாகத் தெரிய வருகிறது.

வவுனியா ஊடாக வந்த பொதுமக்கள் இத் தகவல்களைத் தெரிவித்தனர்.

[உ-எ-3]

## பயிலுநர் ஆசிரியருக்கு அதிகரித்த அலவன்ஸ்

கொழும்பு, ஆக. 15

பயிலுநர் ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் மாத அலவன்ஸ் கடந்த ஜனவரி மாதம் முதல் ஆயிரத்து 500 ரூபாவாக அதிகரிக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

இத்துடன் அரச ஊழியர்களுக்கு இவ்வாண்டு ஜனவரி முதல் வழங்கப்பட்டு வரும் நூறு ரூபா மாத அலவன்ஸ் பயிலுநர் ஆசிரியர்களுக்கும் ஜனவரி முதல் வழங்கப்பட வேண்டும் என்றும் ஜனாதிபதி உத்தரவிட்டிருக்கிறார்.

பயிலுநர் ஆசிரியர்கள் நிலுவையுடன் 100 ரூபா அலவன்ஸையும் சேர்த்துப் பெறலாம் என்று கல்வி மற்றும் உயர்கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

இதேவேளை கடந்த மாதம் தொடக்கம் பயிலுநர் ஆசிரியருக்கு 100 ரூபா வழங்கப்பட்டு அவர்களது பேரில் சேமிப்பில்

(5 ஆம் பக்கம் பார்க்க)

இரத்மலானையில் நேற்று

## ரயில்வே சம்பளப் பணம் ரூ. 48 லட்சம் கொள்ளை!

### இரு ஊழியர்கள் சூட்டுக்குப் பலி

இரத்மலானை ரயில்வே வேலைத் தளத்தில் நேற்று ஆயுதம் தரித்த கோஷ்டியினர் 48 லட்சம் ரூபா சம்பளப் பணத்தை கொள்ளையிட்டுச் சென்றனர்.

கொள்ளையர்கள் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் ரயில்வே பாதுகாப்பு சேவையைச் சேர்ந்த இரு உத்தியோகத்தர்கள் உயிரிழந்தனர்; மற்றும் ஐவர் காயமடைந்தனர்.

நேற்று பொறியியல் பிரிவினின் சம்பள தினமாகும். வாகனத்தில் சம்பளப் பணத்தை எடுத்து வந்த சமயம் — வேலைத்தள நுழைவாயிலில் வைத்து — கொள்ளையர்கள் தமது கைவரிசையைக் காட்டினர்.

அந்த சமயம் குறுக்கிட்ட பாதுகாப்பு உத்தியோகத்தர்களான சார்ஜன்ட் [illegible] பெரேரா, எம். ஏ. [illegible]

(5 ஆம் பக்கம் பார்க்க)

இராணுவத் தீர்வை விரும்பும்

## கடும் போக்காளர் இருவரே புதிய தளபதிகளாக நியமனம்

### பி. பி. ஸி. விமர்சனம்

கொழும்பு, ஆக. 15

வடக்கு, கிழக்கிற்கு நியமிக்கப்பட்டிருக்கும் புதிய இராணுவத் தளபதிகள் வடக்கு - கிழக்குத் தீர்வுக்கு இராணுவத் தீர்வை விரும்பும் கடும் போக்காளர்கள் ஆவர்.

பி. பி. ஸி. தனது செய்தி விமர்சனத்தில் இவ்வாறு குறிப்பிட்டது.

வடக்கிற்குப் பொறுப்பாக நியமிக்கப்பட்டிருக்கும் மேஜர் ஜெனரல் ஜெரி டி சில்வா [வயது 52] 1985ஆம் ஆண்டு முதல் விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு எதிரான போராட்டத்தில் அதிக ஈடுபாடு காட்டி வருபவர். 1987 வடமராட்சி ஒபரேஷனுக்கு இவரே தலைமை வகித்தார்.

கிழக்கு மாகாணத்துக்குப் பொறுப்பாக நியமிக்கப்பட்டிருக்கும் பிரிகேடியர் லக்கி அல்கம [வயது 52] கடும் போக்காளர் எனப் பெயர் பெற்றவர். அதிலும் முக்கியமாக தெற்கில் ஜே. வி. பி. கிளர்ச்சியாளர்களின் விடயத்தில் கொடூரப் போக்கைக் கடைப்பிடித்தவர். ஜே.வி.பி. அடக்கப்பட்டு பின்னர் பூண்டோடு அழிக்கப்பட்டதற்கு இவரே பொறுப்பாக இருந்ததாகக் கூறப்படுகிறது.

ஜே. வி. பி. தீவிரவாதிகளைக் கையாளுவதில் இவர் காட்டிய ஈவு, இரக்கமற்ற கடும் போக்கு சிங்கள மக்களின் உள்ளங்களில் இவரின் பெயரைக் கேட்டதும் பெரும் திகிலை ஏற்படுத்துவதாக

(6 ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவ நடவடிக்கைக்கு உடனடியாக வாய்ப்பில்லை

### முன்னாள் தளபதி கருத்து

யாழ்ப்பாணம், ஆக. 15

யாழ்ப்பாணத்தின் மீதான தாக்குதலை படையினரால் உடனடியாகச் செய்வதற்கு எவ்வித சாத்தியமும் இல்லை. அடுத்த மாதத்திலாவது அத் தாக்குதலைச் செய்ய முடியுமா என்பது சந்தேகமே.

இவ்வாறு பி.பி.ஸிக்கு நேற்று அளித்த பேட்டி ஒன்றில் தெரிவித்தார் விமானப் படையின் முன்னாள் தளபதி மார்ஷல் ஹரி குணதிலக.

அவர் மேலும் கூறியதாவது:-

யாழ்ப்பாணத்தின் மீது படையெடுப்பு நடத்துவது குறித்து இராணுவத்தினர் நீண்ட காலமாகக் கூறிவருகிறார்கள். பல மாதங்களாகச் சமர் புரிந்தும் வருகி

(6 ஆம் பக்கம் பார்க்க)

## ஏழாலையில் ஷெல் பெண் காயம்

ஏழாலை, ஆக. 15

பலாலி முகாம் பகுதியில் இருந்து நேற்றுக்காலை 10.30 மணியளவில் ஏவப்பட்ட ஷெல் ஏழாலையில் விழுந்து வெடித்தது.

வாழைத் தோட்டம் ஒன்றினுள் விழுந்த ஷெல்லுக்கு இலக்காகி ஏழாலை கிழக்கைச் சேர்ந்த சண்முகநாதன் மாலினி [27 வயது] என்ற இளம் பெண் காயமடைந்தார்.

வாழைமரங்கள் பலவும் துண்டாடப்பட்டன. காயம் அடைந்த பெண் யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இதேவேளை, தெல்லிப்பளையில் இராணுவத்தினரின் [illegible] தார்.

[ஒ-45-13-15]

## பதுங்குகுழிகள் அமைக்க பிரசைகள் குழு கோரிக்கை

யாழ்ப்பாணம், ஆக.15

"யாழ். குடாநாட்டின் மீது பெரும் தாக்குதல் ஒன்றை அரச படைகள் நடத்தக் கூடிய சாத்தியம் இருப்பதால், சகலரும் பதுங்கு குழிகள் அமைக்க வேண்டும்"

யாழ். பிரசைகள் குழு இவ்வாறு கோரிக்கை விடுத்திருக்கிறது.

பிரசைகள் குழுவின் வாராந்த கூட்டம் நேற்றுக் காலை நடந்தது.

அதன் பின்னரே மேற்கண்ட கோரிக்கை விடுக்கப்பட்டது.

பொது மக்களுக்கு பிரசைகள் குழு விடுத்துள்ள கோரிக்கைகள் வருமாறு:-

★ வீடுகள் பொது இடங்கள், சந்தைகள், அரச அலுவலகங்கள், தனியார் நிறுவனங்கள் போன்றவற்றில் உடனடியாக பதுங்கு குழிகள்

[6 ஆம் பக்கம் பார்க்க]

**வனத்தை வளர்த்து வனப்பைப் பெருக்கு**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

பின்வரும் பதவிகளுக்கு பொருத்தமான விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் 1992-09-18 ஆம் திகதிவரை என்னால் பெற்றுக் கொள்ளப்படும்.

பதவிகள்:

1. தற்காலிக உதவி விரிவுரையாளர்
   கிறிஸ்தவ நாகரிகம்
   நாடகமும் அரங்குக் கலைகளும்
   நுண்கலை
   பொருளியல்
   அரசறிவியல்
   மெய்யியல்
   இந்து நாகரிகம்
   புவியியல்
   தமிழ்
   ஆங்கிலம்
   தொழில் நிர்வாகம்
   வர்த்தகம்
   சித்தமருத்துவம்
   ஆற்றுகைக் கலை — கர்நாடக சங்கீதம்/ வாய்பாட்டு
   ஆற்றுகைக்கலை — கர்நாடக சங்கீதம்/ வாத்தியங்கள்
   ஆற்றுகைக்கலை — நடனம் / பரதநாட்டியம்
2. தற்காலிக கட்டுரை — ஆசிரியர்
   புவியியல்
   வரலாறு
3. தற்காலிக போதனாசிரியர்
   ஆங்கிலம் - தரம் II
   பரதநாட்டியம்
   கர்நாடக வாய்பாட்டு
   மிருதங்கம்
   வயலின்
   வீணை
4. இடைவரவு விரிவுரையாளர்
   வர்த்தக, கைத்தொழிற்சட்டம்
   சட்டச்சூழல்
   கணக்கியல்
   கணக்காய்வு
   வரி விதிப்பு
   வங்கியியல்
   கிரேக்க, மத்தியகால மெய்யியல்
   தற்கால மேற்கத்திய மெய்யியல்
   பொது உளவியல்
   சமய மெய்யியல்
   பழைய ஏற்பாட்டியல்
   புதிய ஏற்பாட்டியல்
   கிறிஸ்தவ மெய்யியல்
   திருச்சபை வரலாறு
   கிறிஸ்தவ வழிபாட்டியல்
   தமிழ் (சித்தமருத்துவம் பற்றிய அறிவுடன்)
   மீன்பிடிப் புவியியல்
   பிரான்சிய மொழி
   நாடகமும் அரங்குக் கலைகளும் -- (வேடப்புனைவு, நடிப்புக் கொள்கைகள், ஒளி, மரபுவழி நாடகம்)
5. இடைவரவு போதனாசிரியர்
   பாரம்பரிய கைவினைகள்
   நவீன ஓவியம் தீட்டுதல் / கட்டடக்கலை
6. தற்காலிக செய்முறை காட்டுநர்
   சித்தமருத்துவம்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஸ்தாபனக்கிளையின் சிரேஷ்ட உதவிப் பதிவாளரின் அலுவலகத்தில் கிடைக்கக்கூடிய படிவங்களில் விண்ணப்பங்கள் செய்யப்படுதல் வேண்டும்.

தபால் மூலம் படிவங்களையும் இதர விவரங்களையும் பெற விரும்புபவர்கள் 23x10 சதமீற்றர் அளவுடைய சுயமுகவரியிட்டு 2/- முத்திரையொட்டப்பெற்ற தபால்உறையை அனுப்புதல் வேண்டும்.

விதிக்கப்பெற்ற படிவங்களில் அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மாத்திரம் ஏற்றுக் கொள்ளப்படும்.

அரச திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட சபைகளிலுள்ள விண்ணப்பதாரிகள் அந்நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் விண்ணப்பித்தல் வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்ட பதவிகளுக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் தனித்தனி விண்ணப்பங்கள் அனுப்புதல் வேண்டும்.

-பதிவாளர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி.
1992-08-12

(சி-3051)

---

# O/L - பயிற்சிப் பரீட்சை
# நேர அட்டவணை

பகுதி - I ஞாயிறு (16 — 08 — 1992)

9-00 — சமயம் (சைவ/றோ.க)
10-00 — வர்த்தகம்
11-00 — ஆங்கிலம்
1-00 — கணிதம்
2-00 — விஞ்ஞானம்
3-00 — தமிழ்
4-00 — சமூகக்கல்வியும் வரலாறும்

பகுதி - II

செவ்வாய் — 8-30 — தமிழ்
(18-08-92) 1-00 — கணிதம்
வியாழன் — 8-30 — சமூகக்கல்வியும் வரலாறும்
(20-08-92) 1-00 — விஞ்ஞானம்

★ இப் பரீட்சைகளில் எமது நிறுவனத்தில் கற்கின்ற, கற்காத அனைத்து மாணவர்களும் பங்குபற்றலாம்.
★ இப் பரீட்சைகள் ஒவ்வொரு மாதமும் நடைபெறும்.

பரீட்சைப் பகுதி:

## BOND INSTITUTES,

58A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (சி-3054)

---

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



மலர்வு: 23 — 11 — 1939

உதிர்வு: 16 — 07 — 1992

திருமதி

## சரோஜினிதேவி பத்மநாதன்

அன்பு மகளாய், ஆசைச் சகோதரியாய்,
அரிய துணைவியாய், அரவணைக்கும் தாயாகி,
அன்பு காட்டிய எம் அன்புத் தெய்வமே!
நீங்கள் மறைந்து இன்றோடு 31 நாட்கள் -
சென்றுவிட்டன

இன்னும் எங்கள் துயர் மறையவில்லை.

அன்னாரின் இல்லத்தில் இன்று 10 மணியளவில் நடைபெறும் அந்தியேட்டி, சபிண்டீகரணக் கிரியைகளில் பங்குபற்றுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்:
கணவன், பிள்ளைகள்,
சகோதரர்கள்.

கல்லூரி வீதி,
உரும்பராய் வடக்கு.

(22160)

---

## பிக்கு ஆள்மாறாட்டம்

தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையில் ஆள்மாறாட்டம் செய்தார் என்று கூறப்படும் பௌத்த பிக்கு ஒருவரை கண்டிப் பொலீஸார் கடந்த செவ்வாய் கைது செய்தனர்.

இப் பரீட்சையை எடுக்கும் 24 வயதான பிக்கு ஒருவருக்குப் பதிலாக, பேராதனைப் பல்கலைக்கழகக் கலைப் பட்டதாரி மாணவரான இன்னொரு பிக்கு மோசடி செய்யப்பட்ட அடையாளக் கார்ட்டுடன் பரீட்சை எழுத முயற்சித்த போது கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட சமயம் அவர் பௌத்த நாகரி[illegible] [illegible]ருந்தார். (இ-ன)

---

## கத்திவெட்டில் பலியானார்!

கத்திவெட்டுச் சம்பவம் ஒன்றில் கழுத்தில் வெட்டுக்காயத்திற்கு இலக்காகிய ஒருவர் ஆஸ்பத்திரிக்கு எடுத்து வரும்போது இடையில் மரணமானார்.

வல்வெட்டித்துறை கொம்மாந்துறையில் நேற்று முன்தினம் இரவு 8 மணிக்கு இடம்பெற்ற இச்சம்பவத்தில் கொம்மாந்துறையைச் சேர்ந்த சின்னத்தம்பி (வயது 50) என்பவரே மரணமானார்.

இவரது மரணம் தொடர்பாக சந்தேக நபர் ஒருவரை காவல்துறையினர் கைது செய்திருப்பதாக அறியவருகிறது. (உ-15)

---

## மாவீரர் உருவப்படத் திரைநீக்கமும், புதிய வீதி திறப்பு விழாவும், பொதுக்கூட்டமும்

சுன்னாகம் மேற்கு கந்தரோடை வீதியில் ஜயன்னா சனசமூக நிலையமும், நான்காம் வட்டார மக்களும் இணைந்து இந்நிலையத்திற்கருகாமையில் மாவீரரை கௌரவிக்கும் விழாவை (15-08-1992) சனிக்கிழமை ஏற்பாடு செய்துள்ளனர்.

நிகழ்ச்சிகள் ஆரம்பம்: மாலை 7-00மணி

★ விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர்கள் கலந்து கொண்டு உரை நிகழ்த்துவார்கள்.
★ ஆனையிறவுத் தாக்குதல் (வீடியோ படக்காட்சி)
★ சந்தனக்காடு புகழ் பொன் கணேசமூர்த்தி வழங்கும் "இரட்டை முகங்கள்" நாடகம்
★ தமிழீழத்தில் முன்னணி வகிக்கும் கவிதாலயாவின் "இசை நிகழ்ச்சி"

(இ/2497)

---

## NEW SCIENCE ACADEMY
JAFFNA.

# A/L 93

அலகு ரீதியான மீட்டல் வினா-விடை வகுப்பு
நாளை ஆரம்பம்

**PHYSICS**
திரு. சோதிலிங்கம் B. Sc. (Special)
திரு. கணேசன் B. Sc. (Eng.)

**CHEMISTRY**
திரு. சண் B. Sc.
திரு. மணியம் B. Sc

**BOTANY**
திரு. குணசீலன் B. Sc.

**ZOOLOGY**
திரு. தம்பிராஜா B. Sc.
திரு. ஸ்ரீகரன் B. Sc.

**PURE / APP.**
திரு. வெக்டர் B. Sc.
திரு. குணசிங்கம் B. Sc.

ஆரம்பம்: 16 - 08 - 1992

ஞாயிறு காலை 6-00 பிரிவு I
ஞாயிறு நண்பகல் 12-00 பிரிவு II

(சி-3141)

---

# விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

## 93, 94 கலை, வர்த்தகம்

**பொருளியல் - திரு. கலாகரன்**

93 பிரிவு I பணம் வங்கி, சென்மதி நிலுவை, தேசிய வருமானம்

பிரிவு II வினா-விடை

94 பிரிவு I கேள்விக் கோட்பாடு, தேசிய வருமானம்

**வர்த்தகம் - திரு. தேவா**

93 பிரிவு I பொதுக் கூட்டுத்தாபனம், தொழில் நிறுவனங்கள்

94 பிரிவு II தொழில் நிறுவனங்கள்
பிரிவு I தொழில் நிறுவனங்கள்

**கணக்கியல் - திரு. வன்னியசிங்கம்**

93 பிரிவு I மாற்றுண்டியல் க/கு, ஒப்படைக் க/கு
பிரிவு II ஒப்படைக் க/கு

94 பிரிவு I முடிவுக் க/குக்கு செம்மையாக்கலும் வங்கிக் கணக்கிணக்கக் கூற்று.

(சி-3136)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். புற்றுநோயாளர்கள்

# போதிய சிகிச்சையின்றி அவதி

## மஹரகமவில் இடநெருக்கடியாம்

யாழ்ப்பாணம், ஆக. 15

கொழும்பு, மஹரகமவில் உள்ள புற்றுநோய் சிகிச்சை வைத்தியசாலையில் தற்போது இடநெருக்கடி நிலவுவதால் யாழ்ப்பாணத்தில் இருந்து கூடுதலான புற்றுநோயாளர்களை அங்கு கொண்டு செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

புற்றுநோயால் பாதிக்கப்படுவோர் எண்ணிக்கை யாழ்ப்பாணத்தில் பெருகி வருவதாகவும் —

புற்றுநோய் சிகிச்சைக்கு கொழும்புக்கு அனுப்ப வேண்டும் என்று யாழ் போதனா வைத்தியசாலை வைத்தியர்களால் சிபார்சு செய்யப்படுவோரை கப்பலில் கூட்டிச் செல்ல செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழு தயாராகவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால் நேற்று திருமலை செல்லும் கப்பலில் 21 புற்றுநோயாளர்கள் மட்டுமே செல்வதாகவும் —

மேலும் புற்றுநோயாளர்களை கூட்டிச்செல்ல கப்பலில் இடவசதி இருந்த போதும், மஹரகம வைத்தியசாலையில் இடநெருக்கடி உள்ளதால் அவர்களைக் கூட்டிச் செல்ல முடியாதுள்ளதாகவும் செஞ்சிலுவைச்சங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

வழமையாக கப்பலில் அழைத்துச் செல்லப்படும் நோயாளர்களில் நாலிலொரு பங்கினர் புற்று நோயாளர்கள் எனவும் தெரிவிக்கப்பட்டது.

(இ-ஏ)

## வீதியில் இருந்த குழியைத் தவிர்த்து

## ஜீப்பை ஓரமாகச் செலுத்த முற்பட கண்ணி வெடித்தது

வீதியில் உள்ள குழி ஒன்றைத் தவிர்ப்பதற்காக மேஜர் ஜெனரல் விஜய விமலரத்தினா ஜீப்பைச் சற்று ஓரமாக செலுத்த முயற்சித்த போதே அமுக்கக் கண்ணி வெடித்தது.

அராலி கண்ணி வெடிச் சம்பவம் தொடர்பாக கூட்டுப் படைகள் தலைமையகப் பேச்சாளர் கேர்ணல் சரத் முனசிங்கா செய்தியாளர் மாநாட்டில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

(இ-ஏ)

## கனத்தைச் சம்பவம்:

## சிறிமா வந்த போது மக்கள் ஆரவாரம் செய்தது ஏன்?

### பின்னணியில் சு.க. என்கிறார் ரணில்

கொழும்பு, ஆக. 15

கோப்பேகடுவ, விஜய விமலரத்தினா ஆகியோரின் இறுதிச் சடங்குகளின் போது கனத்தையில் ஏற்பட்ட குழப்பங்களின் பின்னணியில் சுதந்திரக்கட்சி செயற்பட்டுள்ளது.

அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கா வியாழக்கிழமை நடந்த செய்தியாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்தார்.

கலவரத்தின்போது திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவைப் பார்த்து மக்கள் ஆரவாரம் செய்தது ஏன் என்றும் அவர் கேட்டார்.

(இ-ஏ)

## கனத்தை சம்பவம்: 10 இளைஞர் கைது

கொழும்பு, ஆக. 15

யாழ். மாவட்டத் தளபதி விஜய விமலரத்தினாவின் இறுதிச் சடங்கின்போது கொழும்பு கனத்தையில் இடம்பெற்ற கலவரம் தொடர்பாக பத்து இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர்.

மேலும் பலர் எந்த நேரத்திலும் கைது செய்யப்படலாம் என்று சொல்லப்படுகிறது.

இதேவேளை இறுதிச்சடங்கின்போது கல்வீச்சில் காயமடைந்த கொழும்பு மேயர் ரட்னசிறி ராஜபக்ஷாவின் வாக்குமூலத்தைப் பொலிஸார் பதிவு செய்துள்ளனர்.

(இ-ஏ)

## 391 அகதிகளே இதுவரை வந்தனர்

கொழும்பு, ஆக. 15

இந்தியாவில் இருந்து இலங்கைத் தமிழ் அகதிகளை மீண்டும் திருப்பி அனுப்புவதை இந்தியா ஆரம்பித்தபின்னர், இதுவரை 391 அகதிகள் இலங்கை வந்துள்ளனர்.

புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் சமூக நலத்துறை அமைச்சுச் செயலாளர் கிறிஸ்டி சில்வா இத்தகவலைச் செய்தியாளர் மாநாட்டில் நேற்றுத் தெரிவித்தார்.

இம் மாதம் 17 ஆம் திகதி முதல் தமிழ் அகதிகளை இந்தியா தொடர்ந்து இலங்கைக்கு திருப்பி அனுப்பி வரும் என்றும் அவர் தெரிவித்தார்.

(இ-ஏ)

## முதலாவது பிறந்ததின வாழ்த்து

செல்வன்

### ஜெகதீஸ்வரன் தினேஷ்

தற்பொழுது இத்தாலியில் வசிக்கும் சுதுமலை தெற்கைச் சேர்ந்த ஜெகதீஸ்வரன் – சிறீதங்கநாயகி தம்பதிகளின் தவப்புதல்வன் தினேஷ் தனது முதலாவது பிறந்த தினத்தை இன்று (15 - 08 - 1992) இத்தாலியில் வெகு சிறப்பாகக் கொண்டாடுகின்றார்.

இவரை அப்பா, அம்மா, ராஜி அன்ரா குடும்பத்தினர் (சுதுமலை), காந்தன் மாமா (சவூதி அரேபியா), நாதன் மாமா (சுதுமலை), சிவலோகநாதன் பெரியப்பா (கொழும்பு), பாட்டா (சுதுமலை), அம்மம்மா (சுதுமலை), அப்பப்பா (உசன்), அப்பம்மா (உசன்), மலர் அன்ரா குடும்பத்தினர் (உசன்), பாக்கி அன்ரா குடும்பத்தினர் (உசன்), ஈஸ்வரி அன்ரா குடும்பத்தினர் (உசன்), சிவலோகம் அன்ரா குடும்பத்தினர் (கிளிநொச்சி), பேபி அன்ரா குடும்பத்தினர் (உசன்), விக்கி பெரியப்பா (சவூதி அரேபியா), சிவராசா பெரியப்பா (உசன்), சந்திரன் மாமா (இத்தாலி), சுந்தர் மாமா (இத்தாலி), சிவகுருநாதன் மாமா (சவூதி அரேபியா), வைத்திலிங்கம் குடும்பத்தினர் (கொக்குவில்), சிதம்பரநாதன் குடும்பத்தினர் (கொக்குவில்), ஏனைய உற்றார், உறவினர்கள் அனைவரும் பல்கலையும் கற்று, சுதுமலை அம்மன் அருளோடு பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றனர்.

[22162]

உ

சாவகச்சேரி

## அருள்மிகு ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானம்

## மஹா சண்டிஹோம யாகம்

அன்புடையீர்!

திருக்கணிதப்படி வியாழனது மாற்றம் 11-09-92 அன்று ஏற்படுவதை முன்னிட்டு நாட்டின் நன்மை கருதியும், கீழே கொடுக்கப்பட்டுள்ள நட்சத்திரக்காரர்களுக்குரிய தோஷங்கள் நீங்குவதற்காக அவர்கள் பங்குபற்றவும் மேலே குறிப்பிட்ட சண்டிஹோமம் சென்ற ஆண்டு நடைபெற்றதை விட மிகவும் சிறந்ததாக 20-09-1992 முதல் 22-09-1992 வரை நடைபெறும்.

கணபதி ஹோமம்
நவக்கிரக ஹோமம்
துர்க்கா ஹோமம்
சண்டி ஹோமம்
— மூன்று நாட்கள் நடைபெறும்

★ தோஷமுள்ளவராகக் கருதப்படுபவர்கள் பின்வரும் நட்சத்திரங்களில் பிறந்தவர்கள்.

| | |
|---|---|
| அஸ்வினி | பரணி |
| கார்த்திகை (முதலாங்கால்) | |
| புனர் பூசம் (4 ஆங்கால்) | பூசம் |
| ஆயிலியம் | |
| உத்தரம் (2, 3, 4 ஆங்கால்கள்) | ஹஸ்தம் |
| சித்திரை (1, 2 ஆங்கால்கள்) | |
| மூலம் | பூராடம் |
| உத்தராடம் (முதற் கால்) | |
| அவிட்டம் (3, 4 ஆங்கால்கள்) | சதயம் |
| பூரட்டாதி (1, 2, 3 கால்கள்) | |

இந்த சண்டிஹோம யாகத்தில், உபயத்தில் பங்குபற்ற விரும்புபவர்கள் 25-08-1992ஆம் திகதிக்கு முன்னதாக ஆலயத்துடன் தொடர்பு கொள்ளவும்.

இங்ஙனம்,
பிரம்மஸ்ரீ ப. மஹாகணபதி சர்மா,
தர்மகர்த்தா.

[22118]


விக்னா கல்வி நிறுவனம்
52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.
(O/L வகுப்புகளுக்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்)

O/L
DAY CLASSES (8-00—2-00)
EVENING CLASSES (3-00—6-00)
Sat, & Sun, CLASSES (8-00—2-00)
வகுப்புகளுக்கான

PAPER CLASS
எமது வழமையான திறமைமிக்க யாழ். முன்னணி ஆசிரியர்குழு
ஆரம்பம்: 20 - 08 1992
★ பாட அலகு ரீதியாக வினாத்தாள் வழங்கப்பட்டு மீட்டல் செய்யப்படும்.

(கி/3132)



Personal
NEW SCIENCE CENTRE
Elilakam Front Lane, Jaffna.

93 A/L
One Year Revision Classes
ஆரம்பம்:- 15 - 08 - 92 சனி 7-00 a.m

PHY:- திரு. ரவீந்திரநாதன் B.Sc (Cey) Dip in Ed.
CHE:- திரு. செல்வா B.Sc (Hons)
ZOO:- திரு. ஈஸ்வரதாசன் (B.Sc (Cey)
BOT:- திரு. பாலசுப்பிரமணியம்
Pure / App:- திரு. குணசிங்கம் B.Sc (Cey)

★ 92 A/L பரீட்சையில் தோன்றாத, தோன்றிய மாணவர்களின் வேண்டுகோளுக்கிணங்க இவ் வகுப்பு ஆரம்பிக்கப்படுகிறது.
★ ஒவ்வொரு பாடத்திலும் ஒவ்வொரு அலகு ரீதியாக மீட்டலும் அவற்றுக்கு வினா - விடை முழுப் பாடத்திட்டமும் செய்து முடிக்கப்படும்.

(கி-30..)



Practice Makes One Perfect
ஆண்டு - 5
(புலமைப் பரிசில் - 92)
மாதிரிப் பரீட்சை - 1
16-08-92
மாதிரிப் பரீட்சை - 2
20-08-92

★ Bond — யாழ்ப்பாணம்
★ Selin — இருபாலை
★ Pearl — நீர்வேலி
★ Kugan — ஆவரங்கால்
★ Satha Pons — வடமராட்சி
★ Brilliant — தென்மராட்சி
★ Vinyls — சுன்னாகம்
★ National — பண்டத்தரிப்பு
★ Paarathy — சித்தன்கேணி
★ Bitsmans — மானிப்பாய்
★ Keen — திருநெல்வேலி
★ Osslo — கச்சேரியடி
★ Vinayahar — ஆனைக்கோட்டை
★ Lukky — சண்டிலிப்பாய்
★ Y.M.C.A. — பருத்தித்துறை

விபரங்களுக்கு:
Examination Unit,
BOND INSTITUTES,
யாழ்ப்பாணம்.
(கி-3058)



இந்த இடம்:
உங்கள் தாகத்தை நிச்சயமாக பூர்த்தி செய்யும் ஒரு பொருளை
அறிமுகப்படுத்தப்போகின்றது.
நாளைவரை சற்றுப் பொறுமையைக் கையாளுங்கள்
நாளை இந்த இடத்தைக் கவனியுங்கள்!
(விளம்பர அமைப்பு: செனித் ஜோ எக்:...)
(22167)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

தாவடி மானிப்பாய் வீதியில் பெரிய வீடு நாலரைப் பரப்பில் விற்பனைக்குண்டு. வாங்குபவர் நேரில் வரவும். பாலசிங்கம், இல. 01, செம்மணி வீதி, நல்லூர், முத்திரைச் சந்தை. (சா முவேல் தொழிற்சாலையிலிருந்து இரண்டாவதுவீடு) [22121]

### புலமைப்பரிசில் பரீட்சை

எம்மால் வாரந்தோறும் வெளியிடப்படும் ஆண்டு - 5 புலமைப்பரிசில் மாதிரி வினாத்தாள்களும், அரசாங்கம் நடத்திய இறுதிப் பரீட்சை வினாத்தாள்களும் விடைகளுடன் விற்பனையாகின்றன. Bond Book Stall, 58A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். [5237]

### O/L கணிதம்

92 பரீட்சைக்கான மாதிரி வினாக்கள், மடக்கை, சுட்டிகள், திரிகோணத்தில், எண்கணிதத்தில், வட்டத்தில், வரைபுகளிலும் B Sc (Cey.) ஆசிரியரால் கற்பிக்கப்படும். இல. 85, சிவன்கோவிலடி, திருநெல்வேலி. [22165]

### ENGLISH

English for English Teachers Examination and G.A.Q External (ESOL) by Kandasamy. மேற் குறிப்பிட்டுள்ள பரீட்சைகளுக்கு ஆங்கிலப் பயிற்சி அளிக்கப்படுகிறது இல. 87, திருநெல்வேலி றோட், (பாலத்திற்கு அண்மையில்) கொக்குவில். [22123]

### தேவை

வேப்பம் விதை தேவை. அண்ணா கோப்பி கடைகளிலும் கொடுத்துப் பணம் பெற்றுக் கொள்ளலாம். மில்க்வைற், யாழ்ப்பாணம். [ஜி-3040]

### ஆசிரியர் தேவை

பாலர் கல்விக் கழக பாலர் பாடசாலைக்கு தகுதியும் அனுபவமும் உள்ள பாலர் ஆசிரியர் தேவை. 16 - 08 - 1992 ஞாயிறு காலை 9-00 மணிக்கு நாவலர் பாலர் சோலை, கல்லூரி வீதி, நீராவியடிக்கு மூலச் சான்றிதழ்களுடன் நேரில் வரவும். [22161]

### இலவச திருமண சேவை

35 வயது, அனுஷம், செவ்வாய் 4, அரச தொழில் புரியும் மணமகளுக்கும், 33வயது, திருவோணம், செவ்வாய் 8, ஜேர்மனியில் உள்ள மணமகனுக்கும் மணமக்கள் தேவை. திருமணம் இலங்கையில் செய்யலாம். திருமதி விமலா, யாழ். நாச்சிமார் கோவிலடி. [22136]

### O/L மாணவர்களுக்கு

O/L மாணவர்களுக்கான 6 வருட கடந்த கால ஆங்கில வினாத்தாள்கள் தமிழ் மொழி பெயர்ப்புடன் விற்பனையாகின்றன. ஆக்கம்: M.K தில்லைமோகன் (20/-), பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம். [ஜி-3137]

### வியாழ மாற்றம்

11-9-92 இல் நிகழும் வியாழ மாற்றப் பலாபலன்கள் விற்பனையாகின்றன. பன்னிரு இராசிகளுக்கும் விரிவான பலன்கள் உண்டு. விலை ரூபா 8/-. திருக்கணிதம், மட்டுவில், சாவகச்சேரி. [22056]

## தற்கொலையில் வவுனியா முன்னணியில்

தற்கொலைச் சம்பவங்களைப் பொறுத்தவரை இலங்கை உலக நாடுகள் வரிசையில் இரண்டாவது இடத்தையும்—

மாவட்ட ரீதியில் இலங்கையில் வவுனியா மாவட்டம் முதலாவது இடத்தையும் வகிக்கின்றது.

இப்படி மார்க்சா ஆய்வுச் சஞ்சிகையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. [இ-எ]

## A/L 93 Paper Class

12 — 01 விலங்கியல்
01 — 02 இரசாயனவியல்
02 — 03 பௌதிகவியல்
03 — 04 தாவரவியல்

ஆரம்பம்: 16 - 08 - 1992
(ஞாயிறு நண்பகல் 12-00 மணி)
எமது வழமையான ஆசிரியர் குழுவினால்.

**NEW MASTER INSTITUTE,**
B.M.C. Lane, Jaffna.
[ஜி-3047]

### இலங்கை செஞ்சிலுவைச் சங்கம், யாழ். கிளை தலைமையகம்

## அதிர்ஷ்ட இலாபச் சீட்டு

இலங்கை செஞ்சிலுவைச் சங்க, யாழ் கிளையின் பிரிவுகளில் விற்பனை செய்யப்படுகின்ற அதிர்ஷ்ட இலாபச் சீட்டின் குலுக்கல் திகதி 15-08-92 ஆம் திகதியிலிருந்து 30-09-92 ஆம் திகதிக்கு நீடிக்கப்பட்டுள்ளது என்பதை அறியத் தருகின்றேன்.

நன்றி;

ஏ. சீ. செபநாயகம்,
தலைவர்,
(இடைக்காலம்)

73, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.
13-08-92
[ஜி-3053]

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



| மலர்வு: | உதிர்வு: |
|---|---|
| 14 — 05 — 1935 | 18 — 08 — 1989 |

### அமரர் ஆ. சுப்பிரமணியம்
(ஓய்வுபெற்ற பொலீஸ் உத்தியோகத்தர்)
திதி: 15-08-1992

அன்புமுகம் புன்சிரிப்பு அப்பா உங்கள்
அரவணைப்பும் கலகலப்பும் மறக்கப்போமோ?
என்புருகி எம்மையெல்லாம் வளர்த்த தாகம்
எண்ணியெண்ணிக் கண்ணீரைச் சொரிகின்றோமே!
என்துணைவி மக்களென்ற பாசம் யாவும்
எப்படித்தான் மறந்தோடிப் பறந்தீர் ஐயா!
பொன்னுலகில் இறைவனடி மலரில் நாளும்
புதுவாழ்வில் பேரின்பம் பொங்கக் காண்பீர்!

ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்;
அன்பு மனைவி, பிள்ளைகள்,
சகோதரர்கள், உறவினர்கள்.

675, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
[22151]

# நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்





வேலணை மேற்கைச் சேர்ந்த

**அமரர் பொன்னப்பா சண்முகநாதன்**
(இளைப்பாறிய அதிபர்)
தோற்றம்: 10-08-1922
மறைவு: 10-10-1991

**திருமதி சண்முகநாதன் சிவபாக்கியம்**
(திலகம்)
தோற்றம்: 14-08-1928
மறைவு: 21-02-1992

எதிர்பாராமல் எம்மனைவரையும் விட்டுப் பிரிந்து இறைவனடி எய்திய அன்பு மைத்துனர், சகோதரி இருவரினதும் ஆத்ம சாந்திக்காக 16-08-1992 ஞாயிற்றுக் கிழமை காலை 7 மணிக்கு அந்தியேட்டி வில்லூன்றி மடத்திலும், அன்று பகல் 12 மணியளவில் வீட்டுக்கிரியைகள் எமது இல்லத்திலும் நடைபெறும். இவ்வைபவங்களில் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினரை அன்புடன் அழைக்கின்றோம்.

இருவரினதும் ஆத்மா சாந்திக்காக அனுதினமும் இறைவனைப் பிரார்த்திக்கும்:

– உறவினர்.

நா. நாகரெத்தினம்,
(சகோதரர்).
சுதுமலை வீதி, தாவடி தெற்கு.
(22166)

## 11ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 11 — 10 — 1927
மறைவு: 19 — 07 — 1981

மிருதங்க வித்துவான், நாதமணி
### அமரர் வேலுப்பிள்ளை அம்பலவாணர்
(நாச்சிமார் கோவிலடி)
திதி: 15-08-1992

அன்புத்தந்தை தயே! நீங்கள் எம்மைவிட்டுச் சென்று இன்று பதினொரு ஆண்டுகள் பறந்தோடி விட்டன; உங்களது அடிச்சுவட்டையே பின்பற்றி வாழும் எம்மை ஆசீர்வதிப்பீராக.

ஸ்ரீ காமாக்ஷி அம்பிகையைப் பணிந்து வணங்குகின்றோம் ஆத்மா சாந்தி அடைவதாக!

ஸ்ரீ, ரகு, ராம, ஜெயம், லட்சுமி,
சரஸ்வதி, மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

2, இராமநாதன் வீதி,
நாச்சிமார் கோவிலடி,
யாழ்ப்பாணம்.
(22164)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### சந்தேகமானது!

வடக்கு-கிழக்கு யுத்தத்தினால் ஏற்படக் கூடிய அபாயகரமான விளைவுகளை மனத்திற்கொண்டு, அதனை உடனடியாக நிறுத்துவதற்குச் சகல கட்சிகளும் ஒன்றுபட்டுச் செயற்பட வேண்டும்.

அண்மையில் நடைபெற்ற எதிரணிக் கட்சிகளின் கூட்டத்தில் நவசமசமாஜக் கட்சிப் பிரதிநிதிகள் இவ்வாறு வலியுறுத்தும் அறிக்கை ஒன்றைச் சமர்ப்பித்தனர்.

பிரதான எதிர்க்கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா தலைமையில் நடந்த பிரஸ்தாப கூட்டத்தில், ஏனைய இடதுசாரிக் கட்சிகளும், லலித் - காமினி கட்சியான ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியும் பங்கு கொண்டன.

இப்படி ஒரு கோரிக்கை வந்ததால் என்ன...! அதனை ஏற்று எதிர்க்கட்சிகள் எல்லாம் போரை நிறுத்துமாறு அரசிடம் வெளிப்படையாகக் கேட்குமா என்பது சந்தேகமே!

அரசாங்கம் தனது நலனைக் கருதியே, தனது ஆயுளைக் காப்பாற்றிக்கொள்வதற்காகவே யுத்தத்தை நடத்துகிறது. தெற்கில் நிலவும் சமூக, பொருளாதாரப் பிரச்சினைகளில் இருந்து சிங்கள மக்களைத் திசைதிருப்பி விடுவதற்காகவே யுத்தத்தைத் தொடர்கிறது.— என்றெல்லாம் எதிரணிக் கட்சிகளைச் சேர்ந்த பெருந் தலைவர்கள் மற்றும் பிரமுகர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் நீண்ட காலமாகவே பேசி வருகிறார்கள்.

ஆனால் —

நாட்டு மக்களை வீணே அழித்தொழிக்கும் இந்த யுத்தத்தை நிறுத்துங்கள். இராணுவத் தீர்வை நாடாது அரசியல் தீர்வுக்கு வழிகோலுங்கள். அதற்கு நாங்களும் எங்கள் முழு ஒத்துழைப்பையும் தருகிறோம். தமிழர் பிரச்சினை ஒரு தேசியப் பிரச்சினை. தமிழர்களின் நியாயமான உரிமைகளை வழங்கி அவர்களும் கௌரவத்துடன் வாழ வழி செய்வோம். இது விடயத்தில் கட்சி பேதத்தையும், ஆட்சி அதிகாரப் போட்டியையும் கைவிடுவோம் — என்று எந்த எதிர்க்கட்சித் தலைவரோ அல்லது பிரமுகரோ இதுவரை எங்கும் பேசியதில்லை. பத்திரிகைப் பேட்டிகளில் கூறியதுமில்லை!

ஜனாதிபதி தேர்தலுக்குப் பொதுவேட்பாளரை நிறுத்துவதிலும், பொதுத் தேர்தலுக்கு போட்டித் தவிர்ப்பு ஒப்பந்தம் செய்வது குறித்துமே தெற்கின் அரசியல் கட்சிகள் அக்கறை காட்டி வருகின்றன.

வடக்கு - கிழக்கில் நடக்கும் போரில் சிங்களச் சிப்பாய்களும் அநியாயமாகச் சாகிறார்கள். அதனைத் தவிர்ப்பதற்காகவேனும் யுத்தத்தை நிறுத்துமாறு வற்புறுத்த வேண்டும் என்ற சிந்தனை கூட தெற்குத் தலைவர்களுக்கு இல்லை.

யுத்தத்தை உரியமுறையில் நடத்தி தமிழர்களைத் தோற்கடிக்கக் கூடிய தகுதி அரசிடம் இல்லை என்று கண்டிக்கிறார்களே அன்றித் தமிழர் பிரச்சினை தீர்க்கப்படவேண்டும் என்ற கண்ணோடு பார்க்கிறார்கள் இல்லை!

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குள் உள்வீட்டுப் பிரச்சினை. எதிர்க்கட்சிகள் பொது எதிரணியை நிறுவுவதில் ஒவ்வொருவர் ஒவ்வொரு பக்கம் என்று இழுக்கிறார்கள். ஆளும் கட்சிக்குள்ளும் பெரிய திருப்தி நிலவுவதாகச் சொல்வதற்கில்லை.

இந்த லட்சணத்தில், தமிழர் பிரச்சினைக்கு, தமிழர்கள் ஏற்கக்கூடிய தீர்வு ஒன்றை ஒரு மனதாக உருவாக்க எல்லோரும் ஒன்று சேர்வது சாத்தியமா? அது சந்தேகத்திலும் சந்தேகமே!

---

## நல்லூரில் இன்று

யாழ்ப்பாணம், ஆக. 15

நல்லூர் ஸ்ரீகந்தசுவாமி கோயில் உற்சவ காலத்தை முன்னிட்டு ஆலய சுற்றாடலில் - 15 ஆம் திருவிழாவான - இன்று சனிக்கிழமை நடைபெறவுள்ள நிகழ்ச்சிகள் வருமாறு:

★ கிழக்கு வாசல் முருகன் தண்ணீர்ப்பந்தலில் (மாலையில்)— வி. சிவஞானசேகரத்தின் இன்னிசைக் கச்சேரி.

★ மேற்கு வீதியில் பிள்ளையார் ஆலய முன்றலில் (மாலையில்)— ஞானகதாவாரிதி பிரம்மஸ்ரீ வை. நித்தியானந்தசர்மா நிகழ்த்தும் ''சூரன் அரசு'' என்ற பொருளிலான கந்தபுராண கதாப் பிரசங்கம்.

★ நல்லை ஆதீனத்தில் பிற்பகல் 2 மணிக்கு- கந்தபுராணப்படிப்பு, பிற்பகல் 3.00 மணிக்கு— பௌராணிகர் மு. தியாகராசாவின் ''முருக இலக்கியங்கள்'' தொடர் விரிவுரை. [ஒ-30]

## இன்று

யாழ்ப்பாணம், ஆக. 15

''தமிழீழ விடுதலையை வென்றெடுப்பதில் கலை, இலக்கிய வழிகளின் பங்கும் பணியும்'' என்ற தலைப்பிலான கருத்தரங்கும், கலந்துரையாடலும் இன்று மாலை 3 மணிக்கு நடைபெறும்.

கோண்டாவிலில் உள்ள விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழக நடுவப் பணியகத்தில் நடைபெறும் இந்நிகழ்வில் திரு. க. சொக்கலிங்கம் (சொக்கன்), திரு. சோ. பத்மநாதன், திரு. அ. யேசுராசா ஆகியோர் உரையாற்றுவர்.

★ ★ ★

தென்மராட்சி, ஆக. 15

விடுதலைப் புலிகள் போராளிகளும் செஞ்சோலையின் இசைக்குயில்களும் இணைந்து வழங்கும் சப்தஸ்வராவின் இசை மாலை நிகழ்ச்சி இன்று இரவு 8.30 மணிக்கு கொடிகாமம் திருநாவுக்கரசு வித்தியாலய அரங்கில் இடம் பெறும். [உ-117]

★ ★ ★

கைதடி மத்திய சிக்கன கடனுதவி கூட்டுறவுச் சங்கத்தின் பொன் விழா இன்று காலை 9 மணிக்கு யாழ். கைதடி முத்துக்குமாரசுவாமி மகா வித்தியாலயத்தில் நடைபெறும்.

★ ★ ★

தமிழீழக் கல்வி மேம்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில் ''தமிழரின் மொழி, கலை, பண்பாடுகளுடன் ஜப்பானியர் கொண்டுள்ள இசைவாக்கம்— ஒரு கள ஆய்வு''— என்ற தலைப்பிலான ஆய்வுப் பேருரை இன்று பிற்பகல் 3.30 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெறும்.

ஜப்பான், டோக்கியோ கக்சுயின் பல்கலைக்கழக மொழியாய்வு நிறுவனத்தின் ஆய்வுப் பேராசிரியையான திருமதி மனோன்மணி சண்முகதாஸ் இந்தப் பேருரையை நிகழ்த்துவார்.

★ ★ ★

நெற்செய்கையில் ஈடுபடும் விவசாயிகளின் காலபோகம் சம்பந்தமான கூட்டம் இன்று காலை 9 மணிக்கு அளவெட்டி அருணோதயாக் கல்லூரியில் நடைபெறும். [உ-13]

---

## துயர் தீர்ப்பாய் தாயே!

கோனேறும் குலவுதிருக் கரத்தினாளே
குன்றாத மன்னர் வழிக் குலத்தினாளே
மீனேறும் மகுடமணிச் சிரத்தினாளே
மிக்கான துயர்போக்கும் பதத்தினாளே
வானேறும் வழிக்கருளும் வரத்தினாளே
வலிமாய வலைகிழிதி பதத்தினாளே
தேனேறும் கமலமலர் முகத்தினாளே
சேர்ந்த எங்கள்துயர் தீர்ப்பாய் தாயே!

[அன்னை மரியாளின் விண்ணேற்ற விழா — மடு மாதா திருவிழாவை ஒட்டி இக்கவிதை பிரசுரிக்கப்படுகிறது.]

---

### எழுதுநர், தட்டெழுத்தாளர் பதவி:

## விண்ணப்ப முடிவு திகதி இம்மாதம் 31 வரை நீடிப்பு

கொழும்பு, ஆக 15

அரச சேவையில் எழுதுநர், தட்டெழுத்தாளர் பதவிகளுக்கு ஆட்களைச் சேர்ப்பதற்கான போட்டிப் பரீட்சையின் விண்ணப்ப முடிவு திகதி இம்மாதம் 31 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளதாக பொது நிர்வாக அமைச்சு அறிவித்துள்ளது.

இதற்கான முடிவு தினம் இம்மாதம் 7 ஆம் திகதி என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது தெரிந்ததே.

இதற்கிடையில் —

இப் பரீட்சைகளுக்கு யாழ்ப்பாணத்திலிருந்து விண்ணப்பித்தவர்களின் மேலும் 2 ஆயிரத்து 800 விண்ணப்பங்கள் நாளை கப்பல் மூலம் கொழும்புக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளன.

ஏற்கனவே ஐயாயிரம் விண்ணப்பங்கள் இங்கிருந்து அனுப்பப்பட்டு விட்டன. [ஒ-எ-3]

## நாளை

தென்மராட்சி, ஆக. 15

செஞ்சோலையினரின் இசை மாலை நிகழ்ச்சி நாளை சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது. [ஒ-117]

★ ★ ★

கொக்குவில், ஆக. 15

கொக்குவில் நந்தாவில் மனோன்மணி பாடசாலையின் வருடாந்த விளையாட்டுப் போட்டி நாளை பிற்பகல் 1.30 மணிக்கு, நந்தாவில் மனோன்மணி அம்பாள் ஆலய முன்றலில் நடைபெறும். [ஒ-69]

★ ★ ★

யாழ்ப்பாணம், ஆக. 15

எதிர்வரும் 23 ஆம் திகதி நடைபெறவிருக்கும் ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையின் போது — வடமராட்சிக் கோட்டத்தில் — மேற்பார்வையாளராகக் கடமையாற்றும் அதிகாரிகளுக்கான அறிவுறுத்தல் கூட்டம் நாளை காலை 9.30 மணிக்கு பருத்தித்துறை மகாவித்தியாலயத்தில் நடைபெறும். [உ-3]

★ ★ ★

தெல்லிப்பழை, ஆக. 15

வலி - வடக்கிலிருந்து இடம் பெயர்ந்தோருக்கான கலந்துரையாடல் ஒன்று நாளை காலை 10 மணிக்கு இணுவில் அமெரிக்கன் மிஷன் பாடசாலையில் நடைபெறவிருக்கின்றது. [ஒ-68]

★ ★ ★

கொழும்புத்துறை, ஆக. 15

யாழ்ப்பாணம் மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் வருடாந்த பொதுக் கூட்டம் நாளை காலை 9.30 மணிக்கு யாழ். இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலையில் சமாசத் தலைவர் திரு. ச. முருகநேசன் தலைமையில் நடைபெறும். (ஒ-30)

## அளவெட்டியில் நாய்களுக்கு தடுப்பூசி

அளவெட்டி, ஆக. 15

அளவெட்டிப் பகுதியில் இன்று நாய்களுக்கு விசர் நோய் தடுப்பூசி போடப்படும்.

பின்வரும் இடங்களில் தடுப்பூசி ஏற்றப்படும்.

குருக்கள் கிணற்றடி ச. ச. நிலையம் — காலை 8 மணி முதல் 10 மணி வரை.

கும்பலை ச. ச. நிலையம் — காலை 10.30 மணி முதல் 12.30 மணி வரை.

தேரிட்டி ச. ச. நிலையம் — பிற்பகல் 1.30 மணி முதல் 3 30 மணி வரை. [ஒ-13]

---

## திறந்த பல்கலைக்கழக பரீட்சைகள்

இலங்கை திறந்த பல்கலைக்கழக யாழ். பிராந்திய நிலையத்தில் பட்டமேற் கல்வி டிப்புளோமா பயிற்சி நெறிக்கான பரீட்சைகள் எதிர்வரும் 25 ஆம் திகதி முதல் நடைபெறவிருக்கின்றன.

பரீட்சைக்கான அனுமதி அட்டைகள், வினாத்தாள்கள் நேற்று வந்து சேர்ந்தன.

அனுமதிஅட்டைகள்நேற்றே தபாலில் அனுப்பப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. (உ-3)

---



## மௌனம் ஏனோ?

பருந்துருவ விமானங்கள் குண்டைப் போடப்
பரந்துருவிச் செல் ஷெல்'லால் மனிதன்மாள
வருந்து முயிரோலமிடக் குருதி யோட
வதைப்படலம் நடந்திடவும் மவுனமேனோ?
திருந்துதவில் சூரனொடு முன்னாட் செய்த
திகிற்யோரின் பழம்நினைவில் மூழ்கிப்போலும்
மருந்து நிகர் வேலேந்தும் நல்லைக்கந்தா
மகிழ்ந்து விழாக் கொண்டாடி யிருந்தவாறே;

- அராலி பரமேசுவர சர்மா.

---

## 5 உயர் பொலீஸ் அதிகாரிகள் வீரப்பன் குழுவால் கொலை!

சென்னை, ஆக. 15

கர்நாடக மாநிலத்தில் மைசூர் மாவட்ட பொலீஸ் அத்தியட்சகர் ரி ஹரிகிருஷ்ணாவும் வேறு நான்கு பொலீஸ் அதிகாரிகளும் சந்தனக்கடத்தல்காரன் வீரப்பன் தலைமையிலான கும்பல் ஒன்றினால் நேற்றுச் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

மாதேஸ்வர மலைப்பகுதியில் வைத்து அந்தக் கும்பல் மறைந்திருந்து நடத்திய இத் தாக்குதலில் சிவிலியன் ஒருவரும் கொல்லப்பட்டார். இந்தக் கும்பலைப் பிடிப்பதற்கு இராணுவத்தை பயன்படுத்துவது பற்றி கர்நாடக மாநில அரசு தீவிரமாகப் பரிசீலித்து வருகின்றது.

### மட்டு. மயிலந்தனையில்

## பலியான தமிழரில் அனேகர் இந்திய வம்சாவளியினர்

கொழும்பு, ஆக. 15

மட்டக்களப்பு மாவட்டம் - மயிலந்தனையில் படையினரால் கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமக்களில் மூன்றில் இரண்டு பங்கினர் இந்திய வம்சாவளித் தமிழர்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

1977 இல் இடம்பெற்ற இன வன்செயல்களை தொடர்ந்து மலையகத் தேயிலைத் தோட்டங்களில் இருந்து வெளியேறி வந்தவர்களே அவர்கள் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

### போட்டிப் பரீட்சையில் தெரிவான

## எஞ்சிய 149 பேருக்கும் எழுதுநர் நியமனம் வழங்குக!

### அரசாங்க அதிபருக்கு மகஜர்

யாழ்ப்பாணம், ஆக. 15

அமைய எழுதுநர் பதவிக்கென நடத்தப்பட்ட போட்டிப் பரீட்சையில் திறமை அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டும், இதுவரை நியமனம் கிடைக்காத 149 பேர், தமக்கு எழுதுநர் பதவிகளை வழங்குமாறு வற்புறுத்தி யாழ். அரசாங்க அதிபருக்கு மகஜர் ஒன்றை அனுப்பி உள்ளனர்.

திறமை அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட 304 பேரில் 155 பேருக்கு நியமனங்கள் வழங்கப்பட்டுவிட்டதாகவும் —

தமக்கு மட்டும் நியமனம் வழங்க மறுப்பது தமது அடிப்படை உரிமைகளை மறுக்கும் செயலாக அமையும் என்றும் — 149 பேர் சார்பில் அனுப்பி வைக்கப்பட்ட அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

யாழ்ப்பாண மாவட்ட அரசாங்கத் திணைக்களங்களில் வெற்றிடங்கள் இருப்பதாகத் தாம் அறிந்துள்ளதாகவும், அவற்றுக்குத் தங்களை நியமிக்குமாறும் நியமனம் கிடைக்காதவர்கள் அந்த மகஜர் மூலம் கோரிக்கை விடுத்துள்ளார்கள்.

தாம் ஏற்கனவே பரீட்சைக்குத் தோற்றி அதில் தெரிவு செய்யப்பட்டிருக்க, மீண்டும் அடுத்த மாதத்தில் நடக்கவிருக்கும் பரீட்சைக்குத் தோற்றுமாறு கோருவது நியாயமற்றது என்றும் அந்த மகஜரில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (அ)

---

### ரயில்வே...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆகியோர் கொள்ளையர்களின் சூட்டுக்கு இலக்காகிப் பலியானார்கள்.

கொள்ளையர்கள் ரயில்வே வேலைத்தள நுழைவாயில் பகுதியில் புடைவை வியாபாரிகள் வேடம் தரித்து இருந்ததாகச் சொல்லப்படுகிறது. (ஒ)

---

### பயிலுநர்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வைக்க ஏற்பாடாகியுள்ளது.

பயிலுநர் ஆசிரியருக்கு அதிகரித்த அலவன்ஸ் வழங்குவதற்காக திறைசேரி 4 கோடி 20 லட்சம் ரூபா பணத்தை கல்வி, உயர்கல்வி அமைச்சுக்கு வழங்கியுள்ளது. [அ-எ]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## வைத்திலிங்கம் இரத்தினம்

சித்தன்கேணியைச் சேர்ந்த வைத்திலிங்கம் இரத்தினம் சிவபதமடைந்து விட்டார். அன்னார் காலஞ்சென்ற செல்லம்மா அவர்களின் அன்புக் கணவரும், தவராசா [சிறில் பாமசி], தி: மகேஸ்வரி, ந. கனகமணி, கந்தசாமி [France – 'ஈழநாடு Paris', முன்னாள் உதவி ஆசிரியர், ஈழநாடு - யாழ்ப்பாணம்] ஆகியோரின் அன்புத் தந்தையும், புனிதவதி, தியாகராசா [இளைப்பாறிய ஆசிரியர், சித்தன்கேணி கணேச வித்தியாசாலை], நவரத்தினம் [M.P.C.S.Ltd., பசந்தன்], இரத்தினேஸ்வரி [France, முன்னாள் ஆசிரியை - பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி] ஆகியோரின் அன்பு மாமனாரும், குறிஞ்சிக்குமரன், கார்த்திகா, பிரபாகரன் [Norway], கருணாகரன், கவிதா, சுரேந்திரன் [France], ஜனந்தி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று சனிக்கிழமை காலை 8 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் 10 மணிக்கு தகனக்கிரியைக்காக வழுக்கையாறு மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
இ. தவராசா [மகன்]
'நவமணிக்குன்றம்',
சித்தன்கேணி.
[22181]

## சதிரவேலு கந்தையா
[இளைப்பாறிய ஆசிரியர்]

இருபாலையைப் பிறப்பிடமாகக் கொண்ட இளைப்பாறிய ஆசிரியர் சதிரவேலு கந்தையா 14 – 8 – 92 வெள்ளிக்கிழமை சிவபதம் அடைந்துவிட்டார். அன்னார் கந்தவேள் வித்தியாசாலை ஸ்தாபகரும், முன்னாள் கோப்பாய் கிராமச்சங்க அங்கத்தவரும், முன்னாள் கோப்பாய் கிராம முன்னேற்றச்சங்க காரியதரிசியும், இருபாலை சைவபரிபாலன சபையின் காப்பாளரும் ஆவார்.

இவர் காலஞ்சென்ற நாகரெத்தினத்தின் அன்புக் கணவரும், முத்துக்குமாரசாமி [இளைப்பாறிய தபால் அதிபர்], மா. ஞானேஸ்வரி [இளைப்பாறிய ஆசிரியை], பாலசுப்பிரமணியம் [கொழும்பு துறைமுக அதிகார சபை, சைவ முன்னேற்றச்சங்க காரியதரிசி - கொழும்பு 2], சிவயோகேஸ்வரி, இரவீந்திரகுமாரன் [பொறியியலாளர், சமக்கோன் லிமிட்டட்] ஆகியோரின் தந்தையும், கமலவேணி, மகாலிங்கம், அம்பிகைமலர், பாலசண்முகநாதன் [யாழ்ப்பாணம் பலநோக்கு கூட்டுறவுச் சங்கம்], சுலோசனா, யோகேஸ்வரி ஆகியோரின் மாமனாரும், அமரர் சபாபதிப்பிள்ளை [பொலீஸ் உத்தியோகத்தர்], க. முருகேசபிள்ளை [துறைமுக அதிகார சபை], அமரர் சின்னத்தம்பி [துறைமுக அதிகார சபை] ஆகியோரின் சகோதரரும், கமலகுமாரி, ஆனந்தரூபி, சுபாகரன் [கொழும்பு இந்துக்கல்லூரி], கருணாகரன் [கொழும்பு இந்துக் கல்லூரி], சைகினா [சுண்டுக்குளி மகளிர் கல்லூரி], நிசாந்தன் [பரியோவான் கல்லூரி], ஐங்கரன், சுபகரன் ஆகியோரின் அன்புப் பாட்டனாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் நாளை 16-8-92 ஞாயிற்றுக்கிழமை பகல் 10 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக இருபாலை மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல் :
க. இரவீந்திரகுமார்
[மகன்]
அன்பழகன் வீதி, [V. H. லேன்]
இருபாலை - கோப்பாய்.
[22179]

## ஜோசப் தனநாயகம்

பெரிய விளானைச் சேர்ந்த ஜோசப் தனநாயகம் 13 - 8 - 92 இல் காலமாகிவிட்டார். இவர் செல்லத்தம்பி ஜோசேப், பொன்னம்மா ஆகியோரின் அன்பு மகனும், மேரி மாகிறேற், பேணடேற், வேதநாயகம் [சவுதி அரேபியா], அன்ரன் இராஜநாயகம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், றொமினி யசிந்தாவின் அன்புக் கணவரும், டிலோசனின் அன்புத் தகப்பனாரும், எட்வேட், செல்வராஜா, மாசில்லா, மேர்சி, றோஜர் பேக்கன், [அஞ்சல் அலுவலகம், யாழ்ப்பாணம்.], றோனால்ட் பாக்ஸ்ரர், றொபேட் பிறையின், றொபின்சன் விமலதாஸ் [ஹொலண்ட்], றோக் அன்ரனி தாசன் [சுவிற்சர்லாந்து] ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

இறுதிச் சடங்கு இன்று [15 - 8 - 92] காலை 10 00 மணிக்கு இல. 23/3 ஈச்சமோட்டை வீதியில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு நல்லடக்கத்துக்காக எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்;
அ. றோஜர் பேக்கன்.
(மைத்துனர்)
23/3, ஈச்சமோட்டை வீதி,
யாழ்ப்பாணம்.
[22176]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் [பிறைவேட்] லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2, இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 15-08-92 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# அ. தி. மு. க. ஆதரவின்றியே ராவ் அரசு இயங்கும் நிலை!

## ஜெயலலிதாவின் கொட்டம் அடங்கலாம்!!

லண்டன், ஆக. 15

பிரதமர் நரசிம்மராவ் தலைமையில் இந்தியாவில் ஆட்சி அமைத்திருக்கும் சிறுபான்மை காங்கிரஸ் அரசு, இனிமேல் தோழமைக் கட்சியான அ.தி.மு. கவின் ஆதரவின்றியே செயற்படக்கூடிய வாய்ப்பு ஏற்பட்டிருப்பதாகக் கருதப்படுகிறது.

காங்கிரஸ் கட்சியின் தோழமைக் கட்சியாக அ. தி. மு. க. இருந்தபோதிலும் அதன் தலைவரும் சர்ச்சைக்குரிய தமிழக முதல்வருமான செல்வி. ஜெயலலிதா, மத்தியில் ஆட்சியமைத்திருக்கும் காங்கிரஸ் கட்சிக்கு உரிய மரியாதை வழங்காமல், அக்கட்சியை எடுத்தெறிந்து பேசி வருவதும்—

மத்தியில் ஆட்சி நிலைத்திருக்க அ தி மு.க. ஆதரவு அவசியம் என்பதில் அக்கட்சித் தலைவியின் போக்கை காங்கிரஸ் தலைவர்கள் சகித்து வருவதும்— தெரிந்ததே.

ஆனால் தற்போது நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் ஜனதா தள் எம். பிகள் இருபது பேர் அக்கட்சியிலிருந்து வெளியேறி இருப்பதும்—

அவர்கள் குறித்து இறுதி முடிவு எடுக்கப்படும் வரை நாடாளுமன்றில் அவர்களைத் தனிக்குழுவாக இயங்க சபாநாயகர் அனுமதி அளித்திருப்பதும்— நிலைமையை மாற்றி இருக்கிறது.

அஜித் சிங் தலைமையிலான இக்குழுவுக்கு தனிக்கட்சி அந்தஸ்தை சபாநாயகர் வழங்கினால் அக்குழுவின் 20 பேரும் நரசிம்மராவ் அரசை ஆதரிப்பார்கள் என்று கருதப்படுகிறது.

இத்தகைய சந்தர்ப்பத்தில் காங்கிரஸ் அரசு நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை பலத்தைப் பெறுவதற்கு அ. தி. மு. கவின் ஆதரவு தேவையற்றதாகி விடும் என்பது குறிப்பிடத்தக்கது.

இத்தகைய சூழ்நிலையில் மத்திய அரசைக் கொண்டு தான் நினைத்ததைச் செய்விக்கலாம் என்ற மனப்பாங்குடன் ஜெயலலிதா போடும் கொட்டம் அடங்கிப் போய் விடும் என்று அவதானிகள் கருத்துத் தெரிவித்தனர்.

[உ]

## யாழ். நகர்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

தயாளினி [வயது 14], ஸ்ரீவரதன் [வயது 24], திருமதி பத்திநாதர் மங்கையர்க்கரசி [வயது 34], அவரின் மகன் கவாஸ்கர் (வயது 3] ஆகியோரும் — இராசையா ராஜகுலசிங்கம் [வயது 34], ஒட்டுமடத்தைச் சேர்ந்த குருசாமி இராஜேஸ்வரி [வயது 19] ஆகியோரும் காயமடைந்தனர்.

ஒட்டுமடம் பி. ஏ. தம்பி ஒழுங்கை, கொம்பையன் மணல் ஆலடிப் பகுதி உட்பட குடியிருப்புப் பகுதிகளில் பல்வேறு இடங்களிலும் ஷெல்கள் விழுந்து வெடித்தன.

[உ-15]

## கடும் போக்காளர்...

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

இருந்தது.

இதேசமயம், இவ்வாறான கடும் போக்காளர்கள் புதிய தளபதிகளாக நியமிக்கப்பட்டுள்ளதால், வடக்கு - கிழக்கில் இப்போது சமாதான நிலை ஏற்படும் வாய்ப்புக்கள் குறைவாகவே உள்ளன —இப்படி பி. பி. ஸி. விமர்சனத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டது.

[உ]

## பதுங்கு குழிகள்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அமைக்க வேண்டும்.

★ மக்கள் திடீரென இடம்பெயர வேண்டிய தேவை ஏற்படக்கூடும் என்பதால் அவ்வாறான சந்தர்ப்பங்களில் குறிப்பிட்ட நாட்களுக்குத் தேவையான உணவுப் பொருள்களையும் தம்முடன் எடுத்துச் செல்லக் கூடியதாக அவற்றைத் தயார் செய்து வைத்திருக்க வேண்டும்.

★ படையினர் நடவடிக்கையில் மக்கள் சிக்கிக் காயம் அடையக் கூடிய ஆபத்திருப்பதால் — உடன் அவசர சிகிச்சைக்குத் தேவையான — அவித்த துணிகளை [துண்டுகளை] யும் மக்கள் தம்முடன் எடுத்துச் செல்ல வேண்டும் — என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

[உ-3]

## அரசின்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

கல் செய்யப்பட்டிருக்கிறது.

இந்த மனு தொடர்பாக மனுதாரர் தரப்பு ஆதாரச் சான்றிதழ்களைச் சமர்ப்பிக்க இடைக்காலத் தடை விதிக்க நீதிமன்றம் அனுமதி வழங்கியிருக்கிறது. [உ-3]

## யாழ். பல்கலைக்கழகத்துக்கு

# காகிதாதிகள் எடுத்துவர அனுமதி கிடைக்கவில்லை

யாழ். பல்கலைக்கழகத்துக்கு காகிதாதிகள் அனுப்ப கூட்டுப்படை தலைமையகம் அனுமதி மறுத்துள்ளது.

கடந்த காலங்களில் யாழ். பல்கலைக்கழகத்துக்கு மாதாந்தம் 300 'றீம்' காகிதாதிகள் அனுப்பப்பட்டு வந்தன.

கடந்த ஏப்பிரல், மே மாதங்களுக்கு 10றீம் மட்டும் அனுப்பப்பட்டது.

அதன் பின்னர் காகிதாதிகள் எடுத்துச் செல்ல கூட்டுப்படை தலைமையகம் முற்றாக அனுமதி மறுத்துள்ளது.

மாதாந்தம் தேவையான காகிதாதிகளின் தொகை பற்றிய விவரத்தை அனுப்பினால், இரண்டு மாதத்துக்கு ஒரு தடவை அவற்றை எடுத்துச்செல்ல அனுமதி வழங்குவதாக கூட்டுப்படைத் தலைமையகம் பல்கலைக்கழக நிர்வாகத்திடம் முன்னர் உறுதி அளித்திருந்தது.

## பொன்னாலையில் ஷெல், பீரங்கித் தாக்கு

யாழ்ப்பாணம், ஆக. 15

காரைநகர் கடற் பகுதியில் இருந்து நேற்று அதிகாலை 12. 30 மணிக்கு பொன்னாலை கரையோரப் பகுதியை நோக்கி கடற்படையினர் பீரங்கித்தாக்குதலை மேற்கொண்டனர்.

இதேவேளை காரைநகர் இராணுவ முகாமில் இருந்தும் மூளாய், பொன்னாலைப் பகுதிகளை நோக்கி ஷெல் தாக்குதலும் மேற்கொள்ளப்பட்டது

[உ-15]

## கல்விப் பயிற்சிக் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஆக. 15

யாழ். மாவட்டச் சிக்கனக் கடன் வழங்கு சங்கங்களின் சமாசத்தின் கீழ் இயங்கும் சங்கங்களின் யாழ். பிராந்தியப் பிரதிநிதிகளுக்கான கல்விப் பயிற்சிக் கருத்தரங்கு இன்று நடைபெறவுள்ளது.

யாழ். மாவட்டக் கூட்டுறவுச் சபை மண்டபத்தில். யாழ். பிராந்திய சபைத் தலைவர் திரு. செ. கந்தசாமி தலைமையில் காலை 9 மணிக்கு இப்பயிற்சிக் கருத்தரங்கு ஆரம்பமாகும்.

[அ-30]

## இராணுவ...

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

றார்கள்.

ஆனால் அண்மையில் ஏற்பட்ட பேரிழப்பால் போர் வடிவங்களையும், போர்உத்திகளையும் மாற்ற வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. ஆகையால் யாழ்ப்பாணத் தாக்குதல் உடனடியாக நடக்காது என்பதை ஒரு படை அதிகாரியாக இருந்தவன் என்ற முறையில் என்னால் கூற முடியும்.

இதற்குப் பின்னரும் யாழ்ப்பாணத்தின் மீது படையெடுப்பதா என்று முடிவு செய்வது ஓர் அரசியல் முடிவாகவே இருக்க முடியும். இது விடயத்தில் இராணுவத் தரப்பினர் முடிவு எடுக்கமாட்டார்கள். முடிவெடுக்க விரும்பமாட்டார்கள். அரசியல் தலைமைத்துவத்திலிருந்தே முடிவு வர வேண்டும்.

ஜெரி சில்வாவும் கொப்பேகடுவ போன்றவர் என்று சொல்லலாம். இவர் கடுமையான— தீவிரமான— தாக்குதல்களை நடத்த வேண்டும் என்பதில் ஈடுபாடு கொண்டவர். ஆனால் குறைந்த பாதிப்பை ஏற்படுத்த வேண்டும் என்பதிலும் அக்கறை உள்ளவர்.

லக்கி அல்கம போர் தந்திரோபாயங்களை வகுத்துச் செயற்படுத்துவதில் வல்லவர். 1988 இல் தெற்கில் வன்செயல்களை ஒடுக்குவதில் பெரும் பங்காற்றியவர். ஆனால் அவரது தந்திரோபாயங்கள் வடக்கிற்குப் பொருந்துமா என்பது கேள்விக் குறியே. எவ்வாறாயினும் அல்கம இராணுவ அதிகாரிகளில் ஒரு வித்தியாசமான போக்குள்ளவர்— என்றார்.

[அ-ஒ]


# வைத்திய சேவை

வாதரோகமா? உடல் பருமனா? தலைமுடி உதிர்தலா? தலைமயிர் நரைத்தலா? பீனிச பீடையா? குழந்தைகளின் வியாதிகளா? மாதர்களின் ரோகங்களா? இன்னும் எதுவானாலும் சிறந்த சிகிச்சைக்கும் உரிய ஆலோசனைக்கும்.

நாடுங்கள்! நலமடையுங்கள்!!

தினமும் - காலை 8.30 முதல் 12 30 வரை

டாக்டர் த. சிவானந்தன்
D. A. M., R. A. M.P. (Cey)
"சிவா வைத்தியசாலை"
384, கோவில் வீதி, நல்லூர் வடக்கு.

கிளை: ஆனந்த மருத்துவ நிலையம்
249, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

தினமும் - பிற்பகல் 3 00 முதல் 6.00 மணி வரை
(22174)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org